தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்
பதிவு அலுவலகம் : திருச்சூர்
மண்டல அலுவலகம் : கோயமுத்தூர்

ஏல விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் சட்டத்தின் கீழ் (சர்பாஸி சட்டம்) வங்கியின் பிணையத்திலுள்ள அசையா சொத்துக்களின் விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்., காந்திபுரம் கிளையிலிருந்து கடனுதவி பெற்றுள்ளனர். அவர்கள் செலுத்த வேண்டியுள்ள தொகை மற்றும் வட்டி விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கியானது, செக்யூரிடைஸேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் சட்டம் 2002 ன் கீழ் கேட்பு ஓலையை வழங்கியது. அதிகாரம் பெற்ற அலுவலர் பிணையத்திற்கு அளித்த சொத்தினை சுவாதீனப்படுத்திக் கொண்டுள்ளார். மேலும் வங்கியானது செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகள் 2002 ன் விதி 8 மற்றும் 9 ன் கீழ் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது.

கடன் வழங்கியவரின் பெயர் மற்றும் முகவரி	**தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்., காந்திபுரம் கிளை, முதல் தளம், ஸ்ரீ கணேசா காம்ப்ளக்ஸ், எண்.12, 10வது வீதி, காந்திபுரம், கோயம்புத்தூர் – 641012.**

கடன்தாரர் / உத்தரவாதமளித்தவர்களின் பெயர் மற்றும் முகவரி : M/s. ஹோட்டல் மோத்தி, உரிமையாளர் : திரு. J.பிரான்சிஸ் டிசோசா, எண்.8/18–23, தம்பிக்கோனார் தோட்டம், தடாகம் ரோடு, கோயம்புத்தூர் – 641108 மற்றும் உத்தரவாதமளித்துள்ள **திருமதி.சுமா,** க/பெ. திரு. J.பிரான்சிஸ் டிசோசா, எண்.8/18–23, தம்பிக்கோனார் தோட்டம், தடாகம் ரோடு, கோயம்புத்தூர் – 641108

மொத்த நிலுவை விபரம் : ரூ.17,51,059/–(ரூபாய் பதினேழு லட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐம்பத்து ஒன்பது மட்டும்) 31.12.2016 தேதி வரை + 01.01.2017 தேதியிலிருந்து 19.00 சதவீத மாதாந்திரம் கணக்கிடப்படும் வருட வட்டி + 1% அபராத வட்டி மற்றும் பிற செலவுகளுடன் தொகையை திரும்பச் செலுத்தப்படும் காலம் வரை.

ஏலம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் : 15-02-2017, பகல் 11.00 மணிக்கு. காந்திபுரம் கிளை, தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்., முதல் தளம், ஸ்ரீ கணேசா காம்ப்ளக்ஸ், எண்.12, 10வது வீதி, காந்திபுரம், கோயம்புத்தூர் – 641012.

சொத்து விபரம் :

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் வடக்கு தாலூகா, எண்.21 பன்னிமடை கிராமம், சர்வே எண்.532 ல் உள்ள 2.68 புஞ்சை ஏக்கரில், வடபுற பகுதியில், உட்பிரிவு எண்.532/1ன் படி 1.25 புஞ்சை ஏக்கர், இதில் கிழபுற பகுதியில், தான செட்டில்மெண்ட் ஆவண எண்.3440/2006 ன் படி 1.00 புஞ்சை ஏக்கர். இந்தப் பகுதி நிலம் லே அவுட்டாக மாற்றப்பட்டு, 'தம்பி கோனார் லே அவுட்' என்கிற பெயரில் பல்வேறு மனையிடங்களாகப் பிரிக்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்து யூனியன் தீர்மான எண்.95/09–10, தேதி : 07.09.2009 மூலமாக பன்னிடை பஞ்சாயத்துத் தலைவரால் அங்கீகாரம் செய்யப்பட்டு, மேற்படி பஞ்சாயத்தால் தடையில்லாச் சான்றும் வழங்கப்பட்டதில், தான செட்டில்மெண்ட் ஆவண எண்.3571/2009 ன்படி மனை எண்.1 ன் 1851 சதுரடியில், ஆவண எண்.3800/2010ன் படி 756 சதுரடி, அதன்பிறகு ஆவண எண்.6279/2010 ன்படி கீழ்வரும் எல்லைகள் மற்றும் அளவுகளுக்கிடையிலான சொத்து. எல்லைகள் : வடக்கு – மனை எண்.2, கிழக்கு – 20 அடி தென்வடல் லே அவுட் ரோடு, மேற்கு – மேற்கூறப்பட்ட மனை எண்.1ல் உள்ள K.அன்புராஜின் மீதமுள்ள சொத்து, தெற்கு – 16 அடி கிழமேல் ரோடு. இதன் மத்தியில், அளவுகளாக, கிழமேல் வடபுறமாக 21 அடி, கிழமேல் தென்புறமாக 21 அடி, தென்வடல் மேற்புறமாக 35 அடி, தென்வடல் கிழபுறமாக 37 அடி என 756 சதுரடி அல்லது 1 சென்ட் 320 சதுரடி அல்லது 70.24 சதுர மீட்டர் பரப்பிலான பிளாட் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள 688 சதுரடி கட்டிடப்பரப்பிலான கட்டிடம், கதவிணைப்புகள், மின்விளக்கு பிட்டிங்குகள், மின்சார சர்வீஸ் இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, குடிநீர் இணைப்பு மற்றம் அதன் வைப்புத் தொகை, குளியலறை, கழிப்பறை, வடிகால் வசதி (செப்டிக் டேங்க்) முதலியன சகிதம், முருகேசனுக்குச் சொந்தமான நிலத்திற்குக் கிழக்காகச் செல்லும் தென்வடல் இட்டேரியிலிருந்தான, தென்வடல் மற்றும் கிழமேல் ரோடுகளில் மற்றும் வடபுற பகுதியில் அமைந்துள்ள, கிழமேல் ஏரியின் வழித்தடத்தில் வழித்தட, வண்டித்தட உரிமைகள் உட்பட. கதவு எண்.8/18–23. இந்த சொத்து எண்.21, பன்னிமடை கிராம எல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.11,62,000/– (ரூபாய் பதினோரு லட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்)

ஏல நிபந்தனைகள்

1) சொத்துக்களின் விற்பனை, 'எங்குள்ளதோ அங்கு மற்றும் உள்ள நிலையில், வில்லங்கம் ஏதேனுமிருப்பின் அவை உட்பட' என்கிற அடிப்படையில் நடைபெறும். நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் குறைவாக விலை குறிப்பிடப்படும் ஏலக் குறிப்பீடுகள் ஏற்கப்படமாட்டாது. **2)** ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள், பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு, உறையின் மீது '**M/s. ஹோட்டல் மோத்தி கணக்கிற்கான சொத்தின் விற்பனை**' என்று குறிப்பிட்டு, நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10 சதவீதத்தினை முன்வைப்புத் தொகையாக, ரூ.1,16,200/– ஐ வங்கியாளர் காசோலை/கேட்பு வரைவாக 'தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்., காந்திபுரம் கிளை' என்கிற பெயரில், கோவையில் செலுத்தும்படியாக எடுத்து, 14.02.2017 தேதி அன்று அல்லது அதற்கு முன்னதாக, அலுவலக வாடிக்கையாளர் நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். டிடி/காசோலை எண், தேதி மற்றும் வங்கியின் பெயரினை உறையின் மீது குறிப்பிட வேண்டும். விண்ணப்பமானது காந்திபுரம் கிளையின், கிளை மேலாளருக்கு நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். **3)** ஏலத்திற்கு விண்ணப்பிப்பவர்கள், ஆயர் ஆவணத்துடன் பான்கார்டின் நகல் மற்றும் அடையாள, வசிப்பிட சான்றுகளையும் இணைக்க வேண்டும். ஏலத்தில் தேர்வு பெறாதவர்களுக்கு அவர்களின் முன்வைப்புத் தொகை திருப்பியளிக்கப்படும். ஏலத்தினை வென்றவர் ஏல நிபந்தனைகளை மீறினாலோ, நேரம் மற்றும் ஏதேனும் காரணங்களால் தவறிழைப்பார்களாயின் அவர்கள் செலுத்திய வைப்புத் தொகையை முன்னறிவிப்பின்றி இழந்து விட வேண்டியது. டெண்டர் விண்ணப்பப் படிவம் மற்றும் அதாரிட்டி கடிதம் முதலியவற்றை வங்கியின் காந்திபுரம் கிளையிலிருந்து, 14.02.2017 தேதிக்கு முன்னதாக, வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். **4)** முத்திரையிட்ட டெண்டர் கவர்கள் வருகை தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மேற்படி ஏலத் தேதி மற்றும் நேரத்தில் அதிகாரம் பெற்ற அலுவலரால் திறக்கப்படும். **5)** சொத்திற்கான அதிகபட்ச விலையை எட்டுவதற்கு, ஏலதாரர்களுக்கிடையில் டெண்டர் தொகையினை உயர்த்திக் கேட்டுக் கொள்ளும் விதத்தில், அதிகாரம் பெற்ற அலுவலரின் தனித்த முடிவின் பேரில் வாய்ப்பளிக்கப்படும். **6)** ஏலத்தை வென்றவர் அவரது பெயரில் ஏலம் முடிவான அப்போதே ஏலத் தொகையில் 25 சதவீதத் தொகையினை டெபாசிட் செய்து விட வேண்டும். மீதமுள்ள தொகையினை 15 நாட்களில் செலுத்தி விட வேண்டும். செலுத்த வேண்டிய தொகையினை காசோலை/கேட்பு வரைவாக 'தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்., காந்திபுரம் கிளை' என்கிற பெயரில், கோவையில் செலுத்தும்படியாக எடுக்க வேண்டும். இதில் தவறுவாராயின் அவர் அதுவரை செலுத்தியுள்ள அனைத்துத் தொகையையும் இழந்து விட வேண்டியதாகும். ஏலத்தில் தோ்வானவர் முத்திரைத் தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் போன்ற சட்டப்படியான செலவுகளை தாங்களே ஏற்க வேண்டும். **7)** எந்தக் காரணமும் தெரிவிக்காது ஏலக் குறிப்பீட்டை ஏற்கவோ, மறுக்கவோ, ஏலத்தை ஒத்தி வைக்க/தள்ளி வைக்க, எந்த முன்னறிவிப்புமின்றி நிபந்தனைகளில் மாற்றம் செய்ய அதிகாரம் பெற்ற அலுவலர் உரிமையுடையவராவார். சொத்தினை வாங்குபவர்கள் ஏலத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக டைடில், உரிமை, சட்டபூர்வ அங்கீகாரம் போன்றவைகளை தாங்கள் மன திருப்தி கொள்ளும் விதமாக விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். மேற்படி விற்பனையானது வங்கியின் உறுதி செய்தலுக்கு உட்பட்டது. **8)** மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : **போன்: 0422–2490941, 2499932. மொபைல் : 98414–95669.**

இடம் : கோயமுத்தூர்
தேதி : 07–01–2017

அதிகாரம் பெற்ற அலுவலர்
தி கத்தோலிக் சிரியன் வங்கி லிட்.

33x8(w) cms.

Sudhan Publicity
0422-2493363, 97915 00333
97903 33433

'Dinamani'
Coimbatore Dist Edition,
08-01-2017- Sunday